Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 518 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை (11.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 09 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

அலரி மாளிகையில் இருந்து

## அதிகாலையில் வெளியேறிய மஹிந்த

இராணுவ பாதுகாப்புடன் புறப்பட்டார்

02 பக்கம்

படையினருக்கு

## சுடும் அதிகாரம்

பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்கள் அல்லது சேதம் விளைவிக்கும் நபர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வதற்கு முப்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்தோடு, நபர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடத்த முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரை!

யோ.தர்மராஜ்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பதற்காக வருகை தந்திருந்த குண்டர்கள் 'மைனா கோ கம' மற்றும் 'கோட்டா கோ கம'வில் அறவழிப் போராட்டக்காரர்கள் மீதும், அவர்கள் அமைத்திருந்த கூடாரங்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, கோபமடைந்த மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய... 02 பக்கம்

## முன்னாள் பிரதமர் மஹிந்தவின் குடும்பத்தினர் பதுங்கியிருப்பதாக திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

06 பக்கம்

## நாடாளுமன்றத்தை கூட்ட சபாநாயகர் கோரிக்கை

### ஜனாதிபதியிடம் முன்வைப்பு



நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எடுக்கவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார். இன்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தற்போதைய சூழ்நிலையில், கூட்ட நேரத்தில் மாற்றம் ஏற்படலாம் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.



## மேல் மாகாண டீ.ஐ.ஜி தேசபந்து மீது தாக்குதல்

02 பக்கம்

## இலங்கை நெருக்கடிக்கு பேச்சு மூலம் தீர்வுகாண்க

### ஐ.நா. பொதுச்செயலாளர் வலியுறுத்து

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் விரும்புவதாக அவரது பிரதிப் பேச்சாளர் ஃபர்ஹான் ஹக் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

"தற்போதைய சவால்களுக்கு உரையாடல் மூலமாகவும் நாட்டின் மற்றும் மக்களின் நலன்களை மனதில் கொண்டும் தீர்வைக் காண இலங்கையின் அனைத்து பங்குதாரர்களையும் நாங்கள் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறோம்" என்றும் ஹக் கூறினார்.

மேலும் "அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு எதிரான சமீபத்திய வன்முறைகள் குறித்தும் நாங்கள் கவலைப்படுகிறோம், மேலும் அமைதி மற்றும் கட்டுப்பாடு, அத்துடன் ஜனநாயக உரிமைகள், கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை உட்பட ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்று ஹக் கூறினார்.

## பொலிஸ்மா அதிபர், இராணுவத்தளபதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத்தளபதி ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். நாளை 12ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு இருவருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டவாட்சியை உறுதிப்படுத்த முடியாமற்போனமை தொடர்பில் அதிகாரிகள் இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குண்டர் கும்பலை வழிநடத்தியவர்கள் மீது குற்றவியல் வழக்கு தொடர ஆலோசனை

### சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்பு

02 பக்கம்


## இலங்கை மக்களின் நலன்களின் அடிப்படையில் இந்தியா செயற்படும்

### புதுடில்லி நேற்று அறிவிப்பு

ஜனநாயக நடைமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இலங்கை மக்களின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டே இந்தியா செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தாம் பக்சி இதனைத் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

### உஷ்



பொதுமக்களால் தீக்கிரையாக்கப்பட்ட ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளில் இருந்து பெருமளவு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனவாம்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் வீட்டில் இருந்து மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனவாம்.

# இலங்கை எரிகிறது!

தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.

தொலைநகல் : 0112 67 34 42.

தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87

விளம்பரம் : 077 172 1880

மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 11ஆம் திகதி, புதன்கிழமை

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை புறப்பட்டுச் சென்ற அரசாங்க ஆதரவாளர்களினால் (குண்டர்களினால்), கொழும்பு காலிமுகத்திடலில் கடந்த ஒரு மாதகாலமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அரசாங்கத்தையும் பதவி விலகக்கோரி அமைதிவழியில் போராட்டம் நடத்திவரும் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையின் பிரதிபலிப்பாக இன்று நாட்டின் பல பாகங்களிலும் படுமோசமான வன்முறைகள் மூண்டிருக்கின்றன.

தென்னிலங்கை எரிந்துகொண்டிருக்கிறது. பெருவாரியான ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் சாம்பலாகிப்போயின. அமைதிவழிப் போராட்டத்தை அடக்கியொடுக்கிவிட நினைத்த ஆட்சியாளர்களின் முன்யோசனையற்ற செயல்களின் விளைவாக மக்கள் மத்தியில் மூண்டிருக்கும் சீற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் தடுமாறிக்கொணடிருக்கிறது.

அலரிமாளிகைக்குள் அன்றையதினம் கொழும்புக்கு வெளியில் இருந்து பஸ்களில் அழைத்துவரப்பட்ட தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, "சவால்களைக் கண்டு அஞ்சுபவனல்ல" என்று வீராவேசமாகக் கூறினார். ஆனால், வன்முறைகள் மூண்டுக்கொண்டிருக்கையில் பிரதமர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை தனது இளைய சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பிவைத்ததைக் கண்டோம். இலங்கை சுதந்திரத்துக்கு பின்னர் முன்னென்றும் இல்லாதவகையில் எதிர்கொண்டிருக்கும் படுமோசமான பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்காக அமைக்கப்படக்கூடிய எந்தவொரு இடைக்கால அரசாங்கத்திலும் கூட தானே பிரதமர் என்று மார்தட்டிக்கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுக்காலை அலரிமாளிகையில் இருந்து வெளியேறினார். அவரது அடுத்த திட்டம் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

இலங்கையில் மிகவும் மக்கள் செல்வாக்கைக் கொண்ட பெருந்தலைவர் என்று போற்றப்பட்ட மஹிந்த சுமார் இரு தசாப்தங்கள் அரசியலில் கோலோச்சிய பிறகு இறுதியில் மக்களினால் படுமோசமாக வெறுக்கப்படுகின்ற ஒரு அரசியல்வாதி என்ற அபகீர்த்தியுடன் பதவியிலிருந்து இறங்கி வீடு செல்லவேண்டிய அவலநிலை.

2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளுடன் அமோக வெற்றியைப்பெற்று அதிகாரத்துக்கு வந்து, பின்னர் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் மூலமாக மட்டுமீறிய அதிகாரங்களைத் தனதாக்கிக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் 2020 ஓகஸ்ட் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 68 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கிற்கும் நெருக்கமான ஆசனங்களைப் பெற்றதையடுத்து பிரதமராக பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவும் 30 மாதங்களுக்குள் நாட்டு மக்களினால் சபிக்கப்படுகின்ற அளவுக்கு வெறுத்து ஒதுக்கப்படுவார்கள் என்று எவராவது கனவிலும் கூட கற்பனை செய்துபார்த்திருப்பார்களா? தென்னிலங்கையில் ஹம்பாந்தோட்டையில் பாரம்பரியமாக அரசியல் செல்வாக்குடைய வம்சத்தைச் சேர்ந்த இவர்களின் மூதாதையரின் வீடு, ஒரு நாள் தீக்கிரையாக்கப்படும் என்றோ இவர்களின் தந்தையாரின் நினைவாலயம் அடித்து நொறுக்கப்படும் என்றோ எவராவது நினைத்திருப்பார்களா?

ராஜபக்ஷக்கள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து அரசியலில் ஈடுபட்டிருந்தாலும், 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்துக்கு வந்த பின்னரே அவர்களின் குடும்பமும் உறவினர்களும் பெரும் அதிகாரத்துடன் கூடிய செல்வாக்கை வளர்த்துக்கொண்டார்கள். முன்னரும் கூட இலங்கையில் சில குடும்பங்களின் செல்வாக்குடன் கூடிய ஆட்சிகள் மாறிமாறி பதவிக்கு வந்திருக்கின்றன. சேனநாயக்க குடும்பத்தையும் பண்டாரநாயக்க குடும்பத்தையும் உதாரணமாகக் கூறலாம்.ஆனால் அந்தக் குடும்பங்கள் மஹிந்தவின் கீழ் ராஜபக்ஷக்கள் செலுத்தியதைப் போன்று அரசாங்க நிர்வாகத்திலும் கட்சி அமைப்புக்களிலும் தங்கள் அதிகாரத்தை செலுத்தவில்லை அந்தக் குடும்பங்கள் இன்று ராஜபக்ஷ குடும்பம் வெறுக்கப்படுகின்ற அளவுக்கு வெறுக்கப்படவும் இல்லை. ராஜபக்ஷக்கள் ஒரு அட்டகாசமான மமதையுடன் கூடிய அதிகார திமிர்த்தனத்துடன் நடந்துகொண்டதன் விளைவையே இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஊழலும் மோசடியும் அதிகார துஷ்பிரயோகமும் ராஜபக்ஷக்களின் நிர்வாகத்திலேயே நாட்டில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு தலைவிரித்தாடுகின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

மஹிந்தவின் முதலாவது ஜனாதிபதி பதவிக்காலத்தில் அதாவது 2009ஆம் ஆண்டில் 30 வருடகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. போர்வெற்றியை உச்ச அளவுக்கு தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தியே தங்களது அடுத்த கட்ட அரசியலை ராஜபக்ஷக்கள் முன்னெடுத்தார்கள். போரின் முடிவுக்குப் பிறகு சகல இனங்களையும் அரவணைக்கின்ற அரசியல் கொள்கைகளையும் நடைமுறைகளையும் முன்னெடுத்து உள்நாட்டுப் போருக்கு காரணமான இனநெருக்கடிக்கு தீர்வுகாணவேண்டிய அத்தியாவசியத்தை சிங்கள மக்களுக்கு புரியவைத்து, தீர்வொன்றைக் காண்பதன் மூலம் இந்நாட்டின் தலைசிறந்த தலைவர் என்ற பெருமையை தனதாக்கிக் கொள்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு வரலாறு தங்கத்தட்டில் வைத்து வாய்ப்பை வழங்கியது. ஆனால், அதை அவர் வேண்டுமென்றே தவறவிட்டார்.

போர்வெற்றி குறித்த தங்களது எக்காளத்தில் சிங்கள மக்களை மிதக்கவிட்டு இராணுவவாதத்துடன் கூடிய சிங்கள பௌத்த பெரும்பான்மையினவாத அரசியலை முன்னெடுத்த ராஜபக்ஷக்கள் தங்களது தவறான ஆட்சிமுறையையும் ஊழலையும் மூடிமறைத்து, அதிகாரத்தில் காலங்காலமாக தொடர்வதற்கு இனவாதம் என்றென்றைக்கும் கைகொடுக்கும் என்று உறுதியாக நம்பினார்கள். ஆனால், நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அவர்களது கொள்கைகளும் செயற்பாடுகளும் மக்களை இறுதியில் விழிப்படையச் செய்துவிட்டன. இலங்கை வரலாறு காணாத மக்கள் எழுச்சியை இன்று தரிசிக்கிறது. இந்த எழுச்சி அரசியல் புரட்சியொன்றின் சில பரிமாணங்களை எடுத்திருக்கிறது. ஜனாதிபதியையும் பிரதமரையும் மாத்திரமல்ல முழு ராஜபக்ஷ குடும்பமும் அரசியலில் இருந்து விலகவேண்டும் என வீதிகளில் மக்கள் முழக்கங்களை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளும் கூட ஆட்சியைப் பொறுப்பேற்பதற்கு அஞ்சுகின்ற அளவுக்கு நாட்டுப் பொருளாதாரத்தை ராஜபக்ஷக்கள் கொண்டுவந்துவிட்டிருக்கிறார்கள்.

இத்தகைய பின்புலத்தில் அடுத்தது என்ன என்ற கேள்வி எழுகிறது. இன்று நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்கொள்ளக்கூடிய எந்த முயற்சிக்கும் எதிரணிக்கட்சிகள் இனிமேல் ஒத்துழைக்கும் என்று நம்புவதற்கில்லை. என்றாலும், வன்முறைகளில் இருந்து நாட்டை மீட்பதற்கு தங்களுக்கு இருக்கும் பொறுப்பை அரசியல் கட்சிகள் தட்டிக்கழிக்கமுடியாது. ஜனாதிபதியின் அடுத்த நகர்வைநாடும் மக்களும் சர்வதேச சமூகமும் எதிர்ப்பார்த்திருக்கின்றன. ஐந்து வருடங்களுக்கு நிறைவேற்று ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருப்பதற்கு தனக்கு நாட்டுமக்களின் ஆணை இருக்கிறது என்று அவர் கூறிக்கொண்டிருக்கின்ற போதிலும், அவரை வீட்டுக்குப் போகுமாறு கோரும் போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்திருக்கின்றன.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவேனும் மீட்டெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவி அத்தியாவசியமானது. ஆனால் அரசியல் உறுதிப்பாடு இன்றி வன்முறைக்குள் மூழ்கியிருக்கும் எமது நாட்டை தற்போது சர்வதேச சமூகம் எவ்வாறு நோக்கப்போகிறது என்பது முக்கியமான கேள்வி.

வன்முறையை தொடரவிட்டால் சட்டம் ஒழுங்கு முற்றாக சீர்குலைந்து அராஜகமே தலைவிரித்தாடும். அத்தகைய பேராபத்தான நிலை ஏற்படாமல் அமைதியை மீண்டும் நிலைநாட்ட சகல தரப்பினரும் முன்வரவேண்டும் என்பது தமிழனின் வேண்டுகோளாகும்.

# மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்க வவுனியா பொலிஸார் நடவடிக்கை









(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பிரதான நகரங்கள் மற்றும் வீதிகளில் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்காக பொலிஸார் விசேட நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறை சம்பவங்களையடுத்து நிலைமைகளை கட்டுப்படுத்த அரசாங்கத்தால் நாடு பூராகவும் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவசரகால சட்டமும் நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் மக்கள் ஒன்றுகூடி போராட்டங்களை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி தலைமையில் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நேற்று வவுனியா நகரப்பகுதி மற்றும் பிரதான வீதிகளில் பொலிஸாரால் திடீரென வீதியால் செல்பவர்கள் வழிமறிக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படுவதுடன், தேவையற்ற விதமாக நடமாடுபவர்கள் எச்சரிக்கப்பட்டு மீண்டும் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக வவுனியாவில் நண்பகலுக்கு பின்னர் மக்கள் நடமாட்டம் சடுதியாக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பவித்ராவின் பெல்மதுளை வீட்டின் மீது தாக்குதல்







(சிவா ஸ்ரீதரராவ்)

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பவித்ரா வன்னியாராச்சியின் பெல்மதுளை ரில்லேனவில் அமைந்துள்ள அவரது இல்லம் நேற்றுமுன்தினம் (09) இரவு தாக்கப்பட்டுள்ளது. மேலும் நேற்று அதிகாலை (10) குருவிட்ட பிரதேச சபையின் வாகனப் பிரிவில் உள்ள கெப் வண்டி ஒன்றும் தீ வைக்கப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான இரத்தினபுரி மல்வல வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

## அரசியல்வாதிகளின் வீடுகள்...

ரீதியில் போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்தனர்.

இதன் விளைவாக, ஆளுங்கட்சியின் 35 இற்கும் மேற்பட்ட அரசியல் பிரமுகர்களின் வீடுகள் மற்றும் வாகனங்கள் மக்களால் அடித்து நொறுக்கப்பட்டதுடன், தீயிட்டும் கொளுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, வீரகெட்டிய - மெதமுலனவில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்வீக இல்லமும் தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன், ராஜபக்ஷக்களின் பெற்றோரின் கல்லறையும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலக வேண்டாம் எனக்கூறி கொழும்பு அலரி மாளிகைக்கு வருகைத்தந்த அவரின் ஆதரவாளர்கள் மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கமவில் அமைதியான முறையில் போராடிக்கொண்டிருந் தவர்களை தாக்கியும் அவர்கள் தங்கியிருந்த கூடாரங்களையும் அடித்து நொறுக்கியதுடன், தீயிட்டு கொளுத்தினர்.

இதனையடுத்து, தாக்குதலை கண்டித்து நாடு பூராகவும் மக்கள் போராட்டங்களை நடத்திய நிலையில், தங்களுடைய பகுதிகளிலிருந்து அரசியல் பிரமுகர்களின் வீடுகளை அடித்து நொறுக்கியதுடன், தீயிட்டும் கொளுத்தினர்.

அதன்படி, முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷவின் மல்வானை வீடு, சமல் ராஜபக்ஷவின் வீடு மற்றும் அலுவலகம், கெஹெலிய ரம்புக்வெலவின் கண்டி வீடு, விமல் வீரவங்சவின் ஹோகந்தர வீடு, ஷெஹான் சேமசிங்கவின் வீடு, ரோஹித அபேகுணவர்தனவின் களுத்துறை அலுவலகம் மற்றும் பயாகல வீடு, நாலக கொடஹேவாவின் வீடு, காஞ்சனா விஜேசேகரவின் வீடு மற்றும் வாகனங்கள், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் மற்றும் கொழும்பு அலுவலகங்கள், நிமல் லன்ஷாவின் நீர்கொழும்பு வீடு, பந்துல குணவர்தனவின் நுகேகொடை வீடு, ரமேஷ் பத்திரணவின் காலி வீடு, அருந்திக பெர்னாண்டோவின் வென்னப்புவ வீடு, சன்ன ஜயசுமனவின் அநுராதபுரம் வீடு, பிரசன்ன ரணதுங்கவின் உடுகம்பொல வீடு, காமினி லொக்குகேவின் வீடு, தினேஸ் குணவர்தனவின் வீடு, முன்னாள் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் வீடு, நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த திசாநாயக்கவின் வீடு, எஸ்.எம்.சந்திரசேனவின் வீடு, நுவன் அத்துக்கோரளவின் வீடு, பிரதீப்பின் கடவத்தை வீடு, ஜனக பண்டார தென்னகோனின் வீடு, சிறிபால கம்லத்தின் பொலன்னறுவை வீடு, கோகிலா குணவர்தனவின் மீரிகம வீடு, திஸ்ஸகுட்டி ஆரச்சியின் பண்டாரவளை வீடு, சிந்தக்க மாயாதுன்னேவின் புத்தளம் அலுவலகம் மற்றும் வீடு, அநுராத ஜயரட்னவின் கம்பளை அலுவலகம், குணபால ரத்னசேகரவின் குருநாகல் வீடு, சனத் நிஷாந்தவின் வீடு, அனுப பஸ்குவலின் மத்துகம வீடு, அகில சாலிய எல்லாவலவின் பலாங்கொடை வீடு, விதுர விக்ரமநாயக்கவின் ஹொரணை வீடு, டி.பி.ஹேரத்தின் வாரியபொல வீடு, பவித்ரா வன்னியாரச்சியின் பெல்மதுளை வீடு, சந்திம வீரக்கொடியின் வீடு, மொரட்டுவை மேயர் சமன் லால் பெர்னாண்டோவின் வீடு, ஹொரணை மேயரின் வீடு, அத்தனகல பிரதேச சபை தலைவரின் வீடு, கொட்டிகாவத்தை – முல்லேரியா பிரதேச சபை தலைவரின் வீடு, வலல்லாவிட்ட பிரதேச சபை தலைவரின் வீடு, எல்பிட்டிய பிரதேச சபை தலைவரின் வீடு, ராஜபக்ஷக்களின் பெற்றோரின் கல்லறை, நீர்கொழும்பில் உள்ள அவென்ரா கார்டன் ஹோட்டல், உள்ளிட்ட 35 இற்கும் மேற்பட்ட ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், தீயிட்டும் கொழுத்தப்பட்டுள்ளன. மேலும், அவர்களுக்குச் சொந்தமான சில விடுதிகளும் அடித்து நொறுக்கப்பட்டன. களுவாஞ்சிக்குடியிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகமும் அடித்து நொறுக்கப்பட்டன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவருடைய வாகனமும் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. கொழும்பு - காலிமுகத்திடலுக்கு அரச வன்முறையாளர்களை அழைத்து வந்த பஸ்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொலிஸார் ஆகியோரின் வாகனங்களும் மக்களால் சேதமாக்கப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, அநுராதபுரத்தில் உள்ள ராஜபக்ஷக்களின் மந்திரவாதியான ஞான அக்கா என்றழைக்கப்படும் ஞானவதியின் வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான விடுதியும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. இதேவேளை கலவரத்தில் 09 பேர் உயிரிழந்துள்ளதுடன், 216க்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மேல் மாகாண டி.ஐ.ஜி...

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது நேற்று சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

பேர வாவிக்கு அருகில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு காயமேற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவரின் வாகனத்திற்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

## இலங்கை மக்களின்...

வரலாற்று தொடர்புகளைக் கொண்ட இலங்கையின் நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியா இலங்கையின் ஜனநாயக ஸ்திரத்தன்மை பொருளாதார மீட்சி ஆகியவற்றிற்கு முழுமையாக ஆதரவளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா இந்த வருடம் மாத்திரம் இலங்கை மக்கள் தங்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக 3.5 பில்லியன் டொலர்களுக்கு மேல் உதவி வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர மருந்து, உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறைகளுக்கு தீர்வைக் காண்பதற்காக இந்திய மக்கள் உதவிகளை வழங்கியுள்ளனர்.

ஜனநாயக நடைமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இலங்கை மக்களின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டே இந்தியா செயற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அலரி மாளிகையில் இருந்து ...

யோ.தர்மராஜ்

பிரதமர் பதவியிலிருந்து விலகி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் எதிர்ப்புக்களினால் நேற்றுமுன்தினம் இரவு வரை அலரிமாளிகையில் முடங்கியிருந்த நிலையில், இராணுவத்தின் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் நேற்று காலை அங்கிருந்து வெளியேறினார்.

தனக்கு ஆதரவளிக்க வந்த ஆதரவாளர்களினால் காலிமுகத்திடலில் ஏற்படுத்திய கலவரத்தினால் பதவி விலகிய முன்னால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அலரிமாளிகையிலிருந்து வெளியேற முடியாது முடங்கிக் கிடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து, இராணுவத்தின் கஜபா படைப்பிரிவின் 2 ஆயிரம் சிப்பாய்களின் மனிதச் சங்கிலி பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று (10) காலை அலரிமாளிகையிலிருந்து வெளியேறினார். அங்கிருந்து கடும் பாதுகாப்புடன் வெளியேறிய அவர், பொலிஸ் பார்க் மைதானத்திற்கு வந்து, விசேட ஹெலி மூலம் புறப்பட்டார்.

திருகோணமலையிலுள்ள கடற்படை பாதுகாப்பு தலைமையகத்திற்கு சென்றுள்ளதாகவும் அங்கு அவர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

எனினும், அவர் அங்குதான் இருக்கின்றாரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பல வழிகளில் முயற்சிகளை முன்னெடுத்த போதிலும் உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. இதனால், அவர் அங்கில்லையேல் வேறு எங்கேனும் தலைமறைவாகியுள்ளாரா என்பதை அறிய முடியவில்லை.

இவருடன், அவருடைய மனைவி சிராந்தி ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்பம், பெசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்பத்தாரும் இருக்கின்றனர். இவர்கள், அங்கிருந்து விசேட விமானம் அல்லது கப்பல் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான திட்டத்தில் இருப்பதாகவும் சில தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

## குண்டர் கும்பலை வழிநடத்தியவர்கள்...

காலிமுகத்திடலுக்கு முன்பாகவும், அலரிமாளிகைக்கு முன்பாகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், கொழும்பு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்ற தாக்குதல்கள், கலவரங்கள் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் நேற்று (10) பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் அறிக்கைகளை பெற்று நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


அமைதிப் போராட்டம் நடந்த இடத்திற்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கு தலைமைத்துவம் வழங்கியவர்களுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை சுமத்துவதற்கான விசாரணையை ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுன கும்பலின் வன்முறை வெறியாட்டம் குறித்து முழுமையான விசாரணை நடத்தும்படி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.









# மட்டு. க஌ுதாவளையில் மொட்டுக்கட்சியின் காரியாலயத்தின் பெயர்ப்பலகைகள் தீயிட்டு எரிப்பு



(கனகராசா சரவணன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமாரின் களுதாவளை காரியாலயத்தின் பெயர்ப்பலகைகள் கழற்றி தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் நேற்று (10) பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி களுதாவளையில் அமைந்துள்ள மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமாரின் காரியாலயத்துக்கு முன்னால் ஒன்று கூடிய சிலர் கட்சி காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப்பலகைகளை கழற்றி காரியாலயத்துக்கு முன்னால் போட்டு அதனை தீயிட்டு எரித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு



அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல், பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளையும் பழிவாங்கல்களையும் நிறுத்தி அமைதியைப் பேணுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றின் ஊடாக ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில், பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு, அரசியலமைப்பின் ஆணைக்கு அமைய, பொது இணக்கப்பாட்டு ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவை உடனடியாக கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்துமாறு கோரிக்கை

'மைனா கோ கம' மற்றும் 'கோட்டா கோ கம' போராட்டத்தின் மீதான தாக்குதலை திட்டமிட்ட முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு சட்டத்தரணிகள், பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று (10) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க இந்த கோரிக்கையை விடுத்தார்.

அலரிமாளிகைக்குள் திட்டமிட்டு குண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

அலரிமாளிகைக்குள் செல்லும்போது அவர்களிடம் வாள், பொல்லுகள் என்பன இருக்கவில்லை எனவும் அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் வெளியே வரும்போது பாரியளவிலான வாள்கள், பொல்லுகளை ஊடகங்கள் வாயிலாக காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த குண்டர்கள், முதலில் மைனா கோ கமவை தாக்க சென்றதையும் காணக்கூடியதாக இருந்ததாக சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

இவர்கள் இவ்வாறு செல்லும் போது புலனாய்வு அதிகாரிகள் எங்கு சென்றார்கள் என அவர் கேள்வியெழுப்பியதுடன், போராட்டக்களத்தில் தாக்குதல் மேற்கொள்வதற்கு பொலிஸார் இடமளித்ததாகவும் அவர் கூறினார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டு தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டிய வன்னிநாயக்க, இந்த தாக்குதலுக்கு பாதுகாப்பு செயலாளர், பொலிஸ் மா அதிபர், மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் உதவியதாக தெரிவித்தார்.

இதனால் இந்த குழுவிற்கு எதிராக உடனடியாக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என சட்டத்தரணி வன்னிநாயக்க மேலும் தெரிவித்தார்.

# செம்மலை கடலில் நீராடச்சென்ற மூவர் மாயம்

மாயமுல்லைத்தீவு செம்மலை கடலில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சகோதரர்கள் கடலலையில் இழுத்துச் செல்லப்பட்டு நேற்று (10) காணாமல் போயுள்ளனர்.

அளம்பில் கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் குழு ஒன்று செம்மலை கடலில் நீராடுவதற்காக வருகைதந்த நிலையில் கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் அதனையும் பொருட்படுத்தாது நீச்சலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்களில் ஒருவர் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் அவரை காப்பாற்றும் முயற்சியில் ஏனைய இரு சகோதரர்களும் ஈடுபட்டுள்ளபோது அவர்களும் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.


அளம்பிலை சேர்ந்த பத்மநாதன் விஸ்வநாதன் (29) பத்மநாதன் விஜித் (26) பத்மநாதன் விழித்திரன் (22) ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களே அலையில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

இந்த சம்பவத்தை அடுத்து பெருமளவான மக்கள் செம்மலை கடற்கரை பகுதியில் குவிந்துள்ளதோடு பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

தாழமுக்கம் காரணமாக கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுவதால் தேடுதல் முயற்சிகள் எவையும் நேற்று மாலைவரை முன்னெடுக்கப்படவில்லை.

# மஹிந்த நாட்டைவிட்டு வெளியேற மாட்டார்

## மகன் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேற மாட்டார் என்று அவரது மகன் நாமல் ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தாங்கள் வெளியேறப் போகிறோம் என்று நிறைய வதந்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன எனத் தெரிவித்த அவர், நாங்கள் நாட்டை விட்டு வெளியேற மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்.

மஹிந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை என்றும், தனக்குப் பின்வருபவரைத் தெரிவுசெய்வதில் தீவிரப் பங்கு வகிக்க விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், "எனது தந்தை பாதுகாப்பாக இருக்கிறார், அவர் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறார், அவர் குடும்பத்துடன் தொடர்புகொள்கிறார்" என்றும் நாமல் கூறினார்.

# இலங்கைக்கு உலக வங்கி எச்சரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள வன்முறைகள், அபிவிருத்தி பங்காளிகளின் இலக்குகளை அடைந்துகொள்ளும் நடவடிக்கைகளை மேலும் கடினமாக்கியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ஃபரிஸ் எச்.ஹடட் தனது ட்விட்டர் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உடனடி பொருளாதார மீட்சியின் பாதையில் இவை தாக்கம் செலுத்துவதாகவும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை கவலையளிப்பதாகவும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ஃபரிஸ் எச்.ஹடட் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை



இலங்கையில் அரசமைப்பு பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என சுப்பிரமணிய சுவாமி தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில், மக்களின் சீற்றத்தை இந்தியாவிற்கு எதிரான வெளிநாட்டு சக்திகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இது இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## இலங்கையின் புத்தாக்க இளம் வர்த்தக சமூகம் ஒன்றை வலுப்படுத்தியதுடன் முதலாம் கட்டத்தையும் வெற்றியுடன் நிறைவு செய்தது

START UP 2021 Powered by Dialog ENTERPRISE




இலங்கை இளைஞர்களிடையே தொழில்முனைவோர் திறன்களை வளர்த்தெடுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்ட ரியாலிட்டி நிகழ்ச்சியை எமது நாட்டு பார்வையாளர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல கிடைத்தமையை இட்டும், நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியான கால பின்னணியில், எங்கள் இளைஞர்களை தொழில் கோரும் மனநிலையில் இருந்து விடுபடச் செய்து அவர்களிடம் காணப்படும் திறமையாலும் சக்தியாலும் தொழில்முனைவோர் கனவை நாடிச் செல்லும் இலங்கை இளைய தலைமுறையினரை அறிமுகப்படுத்துவதையிட்டும் நாங்கள் பெருமை அடைகிறோம்.

அதேவேளை, சிறப்பு வாய்ந்த இந்த இளைய தலைமுறையினருக்கு உறுதுணையாகவும் பொறுப்புமிக்க இலங்கை குடிமக்கள் ஆகவும் இருந்து, காலத்துக்கேற்ற மற்றும் நீண்ட காலத் தேவையை உணர்ந்து, எந்தவித வரையறைகளையும் விதிக்காது வியாபார துறையில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, இந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு உழைத்த அனைத்து ஆலோசகர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று, எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து திட்டங்கள் மற்றும் மூலோபாய பங்காளிகளுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்களது இந்த வேலைத் திட்டத்தின் வழியாக வெளிக்கிளம்பிய மற்றும் பார்வையாளர்களின் அமோக வரவேற்பை பெற்றுக் கொண்ட அனைத்து இளம் தொழில் முனைவோரும் சர்வதேச சந்தையில் இலங்கையின் பெயரை நிலைநாட்டும் நோக்கத்தோடு தொடர்ந்து தமது செயல்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்த இளைஞர்களின் புகழ்பெற்ற பயணத்தின் பங்காளிகளாகவும் நலன்விரும்பிகள் ஆகவும் இருந்து செயல்பட வருமாறு நாங்கள் உங்களையும் அன்புடன் அழைக்கிறோம். மேலும், புதிய தலைமுறை தொழில் முனைவோரின் கனவுகளுக்கு வலுசேர்க்கும் தெரண STARTUP இன் இரண்டாம் கட்டத்தை விரைவில் எதிர் பாருங்கள்.

PROJECT PARTNERS

USAID FROM THE AMERICAN PEOPLE · YOULEAD · Partners for Good · Ministry of Youth & Sports

STRATEGIC PARTNERS

SLIM Sri Lanka Institute of Marketing · SLIC · HARDTALK



# மஹிந்த ராஜபக்ஷவின் எழுச்சியும் வீழ்ச்சியும்!

இலங்கையின் அசைக்க முடியாத சக்தியாகத் திகழ்ந்த மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட போராட்ட சுனாமியில் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

பிரிட்டனிடமிருந்து 1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர், இலங்கையில் அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, அந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதன்மூலம் இறக்குமதி செய்யப்படும் உணவு, மசகு எண்ணெய்க்கு பணம் செலுத்த முடியாததால், அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு விலைவாசி விண்ணை எட்டியது.

இதனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருவரும் இராஜினாமா செய்யக் கோரி பொதுமக்கள் கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி முதல் தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

நெருக்கடி அதிகரிக்கவே அமைச்சரவையிலிருந்து தனது மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ஆகியோரை அமைச்சர் பதவியிலிருந்து கடந்த ஏப்ரல் மத்தியில் நீக்கினார் ஜனாதிபதி கோட்டாபய. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மாட்டேன் என தொடர்ந்து கூறி வந்தார். தற்போது அவரது ஆதரவாளர்கள் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பிரதமர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் மஹிந்த ராஜபக்ஷ

இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ , 2015 ஜனாதிபதி தேர்தலில் படுதோல்வியடைந்தார். பின்னர், 2020ஆம் ஆண்டு ஈஸ்டர் தின தாக்குதலில் இந்தியர்கள் 11 பேர் உட்பட 270 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து, ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில், அவர் புதிதாகத் தொடங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாபெரும் வெற்றியை அடைந்தது.

இதன்மூலம் சக்திவாய்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் தங்களது அதிகாரத்தை மீண்டும் வலுப்படுத்தினர். மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றார்.

2020ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று பரவலின்போது பிற தெற்காசிய நாடுகளைக் காட்டிலும் இலங்கையில் குறைவான நோய்த்தொற்று பாதிப்பு மற்றும் உயிரிழப்புகளே ஏற்பட்ட போதிலும், இலங்கையில் சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவைச் சந்தித்தது. தனது பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையையே பெரிதும் நம்பியிருந்த அந்த நாட்டுக்கு பேரிழப்பு ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பிரதமர் மஹிந்த இராஜினாமா செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

### மஹிந்தவின் அரசியல்

மஹிந்த ராஜபக்ஷ தனது 24 ஆவது வயதில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977இல் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், தனது சட்டப் படிப்பில் கவனம் செலுத்திய அவர், 1989இல் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1994-2001 காலகட்டங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசில் தொழிலாளர் துறை அமைச்சர், மீன்வளத்துறை அமைச்சராகப் பணியாற்றினார். 2004 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி தனிப் பெரும்பான்மை பெற்றதையடுத்து, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினார் சந்திரிகா. 2005 பொதுத் தேர்தலின்போது இலங்கை சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த அறிவிக்கப்பட்டார். அத்தேர்தலில் அவர் வெற்றி பெற்றதையடுத்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்கப்போவதாக அறிவித்தார். சுமார் 30 ஆண்டு காலமாக நடைபெற்று வந்த சண்டையில், 2009இல் விடுதலைப் புலிகள் இயக்கம் தோல்வியைச் சந்தித்த பின்னர், சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்தவின் செல்வாக்கு அதிகரித்தது.

இதைப் பயன்படுத்தி 2010இல் அவர் மீண்டும் ஜனாதிபதியானார் . 2005-2015 காலகட்டத்தில் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ. மேலும், மூன்றாவது முறையாக அவர் ஜனாதிபதி பதவியை வகிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. அவரது சகோதரர்கள் கோட்டாபய, பெசில், சமல் ஆகியோருக்கும் முக்கியமான பதவிகள் அளிக்கப்பட்டன. இதனால், நாட்டை ஒரு குடும்ப நிறுவனம்போல் நடத்துவதாக அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

### செல்வாக்கு சரிவு

விலைவாசி உயர்வு, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் உள்ளிட்ட காரணங்களால் மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு 2014 காலகட்டத்தில் சரியத் தொடங்கியது. மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகும் முயற்சியில், ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்தினார் அவர். ஆனால், 2015இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார். அவரது அமைச்சரவையில் இருந்த மைத்ரிபால சிறிசேன, மஹிந்தவை வீழ்த்தி ஜனாதிபதியாக பதவியேற்றார். முன்னதாக, மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சீனாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றினார். ஆனால், சீனாவின் கடன் வலையில் இலங்கை விழுவதற்கு மஹிந்த ராஜபக்ஷதான் காரணம் என்ற விமர்சனம் எழுந்தது. குறிப்பாக, சீனாவின் கடனுதவியில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் கட்டப்பட்டது. ஆனால், அதனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில், 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு சீனாவிடம் அந்தத் துறைமுகம் ஒப்படைக்கப்பட்டது.

2015 தேர்தல் தோல்விக்குப் பின்னர், ராஜபக்ஷக்கள் மீது பல்வேறு ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன. 2018, ஒக்டோபரில் அப்போதைய ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைப் பதவியிலிருந்து நீக்கியதைத் தொடர்ந்து, பிரதமராக நியமிக்கப்பட்டார் மஹிந்த. ஆனால், நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சிறிசேன கலைத்தது செல்லாது என உயர்நீதிமன்றம் அறிவித்ததையடுத்து டிசம்பர் மாதம் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார் மஹிந்த.

பின்னர், ஆளும் கட்சியிலிருந்து விலகிய மஹிந்த மற்றும் அவரின் ஆதரவாளர்கள், மஹிந்தவின் சகோதரர் தொடங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்தனர். அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரானார் மஹிந்த.

2019, ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தில் தேவாலயங்களில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதல் இலங்கை அரசியலில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. நாட்டின் பாதுகாப்பில் ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தோல்வியடைந்துவிட்டதாக ராஜபக்ஷக்கள் குற்றம் சாட்டினர்.

2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட மஹிந்தவின் இளைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ வென்றார். விடுதலைப் புலிகளுடனான போரின்போது பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்தவர் கோட்டாபய என்பது குறிப்பிடத்தக்கது. கோட்டாபய ஜனாதிபதியானதையடுத்து பிரதமராக மஹிந்தவை நியமித்தார்.

அதன்பின்னர், இப்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியால் கிளர்ந்தெழுந்த போராட்டம் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியுள்ளது.

நன்றி - தினமணி

# சாவிற்கு அழைப்பு விடுக்கிறதா, ஷவர்மா?

## எச்சரிக்கை ரிப்போர்ட்...

## கேரளத்தில் சோகம்: ஷவர்மா சாப்பிட்ட மாணவி பலி: 17 பேர் மருத்துவமனையில் அனுமதி



கடந்த 2 ஆம் தேதி கேரளத்தில் நடைபெற்ற இந்த அதிர்ச்சி சம்பவம் அந்த மாநிலத்தையும் தாண்டி தற்போது இந்தியா முழுவதும் பேசுபொருளாகியுள்ளது. கான்ஹாகட் மாவட்டத்தைச் சேர்ந்த தேவந்தா என்கிற இளம்பெண் கெட்டுப்போன ஷவர்மா சாப்பிட்டு உயிரிழந்திருக்கிறார். அவருடன் சேர்த்து ஷவர்மா சாப்பிட்ட 17 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு தமிழகத்தில் அசைவ உணவகங்களில் உணவுப் பாதுகாப்புத் துறையினர் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க தஞ்சாவூரில் துரித உணவகத்தில் ஷவர்மா சாப்பிட்ட கல்லூரி மாணவர்கள் 3 பேருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்ட நிலையில், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 47 கடைகளில் நடைபெற்ற திடீர் சோதனையில் கெட்டுப்போன நிலையிலிருந்த 138 கிலோ அசைவ உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டிருக்கின்றன.

தருமபுரி நகரிலுள்ள அசைவ, துரித உணவகங்களில் உணவுப் பாதுகாப்புத் துறையினர் கடந்த சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். இதில், தரமற்ற 40 கிலோ இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது. நாகை மற்றும் திருக்குவளையில் உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் மேற்கொண்ட சோதனையின்போது, காலாவதியான 310 கிலோ கோழிக்கறி பறிமுதல் செய்யப்பட்டது.

மதுரையில் ஷவர்மா உணவு தயாரிக்கப்படும் உணவகங்களில், உணவுப் பாதுகாப்புத்துறையினர் நடத்திய திடீர் ஆய்வில், 10 கிலோ கெட்டுப்போன கோழி இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது. இப்படி இன்னும் பல...

இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் கெட்டுப்போன இறைச்சிகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. அதுவும் ஷவர்மா உணவு வகையை சாப்பிட்டு இப்படி நேர்ந்துள்ளதால், சமீபத்திய செய்திகளில் அதிகம் அடிபடும் பெயராக ஷவர்மா மாறியுள்ளது.

அதென்ன ஷவர்மா?

துண்டாக்கப்பட்ட கோழி இறைச்சியை கம்பியில் செலுத்தி வெப்பத்தில் சுட்டு அதனை மீண்டும் வெட்டியெடுத்து நாண் அல்லது சப்பாத்தி வகை ரொட்டிகளால் சுற்றிச் சாப்பிடும் உணவே ஷவர்மா. தொடக்கத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த ஷவர்மா கடைகள் தற்போது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரத்தியேகக் கடைகளாகத் தோன்றிவருகின்றன.

ஒரு நாட்டிற்கென பண்பாடும், கலாசாரமும், மொழியும் வரலாற்றுக் கூறுகளாகப் பார்க்கப்படுகிறதோ அதேபோன்றதொரு இடத்தை உணவுகளும் பெறுகின்றன. கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பல உணவுகள் இன்றும் மக்களின் விருப்பமான உணவுப் பட்டியலில் உள்ளன.

எப்படி ஒரு மொழியை இன்னார்தான் கண்டுபிடித்தார் என்று வரையறுத்து சொல்ல முடியாதோ அதேபோல் உணவுகளையும் இவர்தான் கண்டுபிடித்தார் என குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கேற்ப உணவுகள் தோன்றுகின்றன. மக்களிடையே முக்கியத்துவம் பெறுகின்றன. மக்களால் பிற இடங்களுக்கும் கடத்தப்படுகின்றன.

இன்றைக்குத் தமிழக செய்திகளில் பரவலான இடத்தைப் பிடித்துள்ள ஷவர்மா 1972 ஆம் ஆண்டு துருக்கியிலிருந்து வந்த ஒரு தொழிலாளியால் ஜேர்மனியின் பெர்லினில் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அந்தத் தொழிலாளி தன்னுடைய பெர்லின் பயணத்தின்போது இதர தொழிலாளர்கள் தங்களது மதிய உணவாக வறுக்கப்பட்ட காய்கறிகளுடன் கோழி இறைச்சியைச் சுட்டு சாப்பிடுவதை அறிந்ததாகவும், அந்த உணவை மேலும் சுவையாக்க விரும்பிய அவர் அதை “வோய்லா” என்று அழைக்கப்படும் ஒரு வகையான ரொட்டியில் சுற்றி ஷவர்மாவை உருவாக்கினார் எனவும் நம்பப்படுகிறது.

ஷவர்மாவின் தோற்றம் குறித்து இதுதான் திட்டவட்டமானது எனக் கூற முடியாத நிலை உள்ளது. ஒரு சாரார் ஷவர்மா ஜேர்மனியில் உருவானது என்றும், மற்றொரு சாரார் இது துருக்கியில் உருவானது என்றும் தெரிவிக்கின்றனர். எது எப்படியிருந்தாலும் ஷவர்மா வகை உணவுகள் ஐரோப்பாவிற்கு சொந்தமானவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஏன் ஷவர்மா வகை உணவுப் பொருள்கள் பேசுபொருளாகியுள்ளன?

இடம்பெயரும் மக்களுடன் அவர்களின் பழக்கவழக்கங்கள், மொழிகள், பண்பாட்டு கலாசார முறைகளுடன் உணவு முறைகளும் பயணம் செய்கின்றன. இந்தியாவில் வணிக நோக்கங்களுக்காக வந்த ஐரோப்பியர்கள் மூலம் ஷவர்மா வகை உணவுகள் நம் நாட்டிற்கு அறிமுகமாகின.

இடம்பெயர்ந்துவரும் மக்கள் மீது இயல்பாகவே எழும் வெறுப்பைப் போல் மேற்கத்திய உணவுகளின் மீது ஆரம்பத்தில் மோகம் எழுந்தாலும், பின்னர் அவற்றின் மீது வெறுப்பு பரவ ஆரம்பிக்கிறது.

ஷவர்மாவைப் பொறுத்தவரையில் அதில் சேர்க்கப்படும் இறைச்சியும், அது சரியான பதத்தில் பயன்படுத்தப்படுவதும் சர்ச்சையாகியுள்ளது. பொதுவாக இறைச்சியைப் பொறுத்தவரையில் சரியான வெப்பநிலையில் சமைக்கப்பட வேண்டும். 14 மணிநேரத்திற்குள்ளாக அதனை சமைப்பது, சரியான வெப்பநிலையில் அவற்றைப் பாதுகாப்பது என்கிற வழிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படாதபோது அவை கெட்டுப் போகின்றன. உண்ண ஒவ்வாதவையாகின்றன.

உணவகங்களில் அதிகம் விரும்பி சாப்பிடப்படும் உணவாக இருக்கும் அசைவ உணவுகள் எப்படி சமைக்கப்படுகின்றன என்பதை அறியவோ, எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளவோ வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு அமைவதில்லை.

இவற்றைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் உணவக உரிமையாளர்கள் உப்பு கலந்த நீரில் கெட்டுப்போன அசைவ உணவுகளை சேர்த்து அவற்றைச் சமைத்து வாடிக்கையாளர்களுக்கு பரிமாறுகின்றனர்.

சமீபத்தில் சிக்கிய பிரபல அசைவ பிரியாணி கடைகளே இதற்கு சான்று. தங்களுடைய சுவைக்காக மக்களிடம் நல்ல பெயரைப் பெற்ற நட்சத்திர பிரியாணி கடைகளே தரமற்ற கறியினைப் பயன்படுத்துவது வெட்டவெளிச்சமானது.

உணவுப் பாதுகாப்பில் எவ்வித அக்கறையுமின்று இவ்வாறு சமைக்கப்படும் உணவுகளை உண்ணும் மக்கள் வயிற்றுப் போக்கு, உடலில் நீர் இழப்பு போன்ற உடல்நல சிக்கல்களால் பாதிக்கப்படுகின்றனர்.

சமீபத்தில் கேரளத்தில் இறந்த மாணவியின் உடற்கூராய்வு அறிக்கையிலும் கூட கெட்டுப்போன ஷவர்மாவில் ஷிகெல்லா நச்சுக்கிருமி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷிகெல்லா உயிர்க் கொல்லி கிடையாது என்கிறபோதிலும் அசைவம் என்று மட்டுமல்லாமல் சைவ உணவுகளிலும்கூட உருவாவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படாத அனைத்து வகை உணவுகளிலும் ஷிகெல்லா உருவாக வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தமிழகத்தில் வீதிக்கு இரண்டு ஷவர்மா கடைகளேனும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே இவற்றில் பயன்படுத்தப்படும் இறைச்சிகள் தரமானவைதானா, உரிய காலத்தில் பயன்படுத்தப்படுகிறதா என சம்பந்தப்பட்ட கடைக்காரர்களைத் தவிர யாராலும் இதை உறுதி செய்ய முடியாது.

ஷவர்மாவுக்காகத் தயார் செய்யப்பட்டுக் கூம்பு வடிவில் தொங்கவிட்டு சூடுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இறைச்சித் தொகுதி அன்றே விற்றுத் தீராவிட்டால் மீதியிருக்கும் இறைச்சியை என்ன செய்கிறார்கள்? அதுவே மறுநாள் ஏதோவொரு தயாரிப்புக்குப் பின்னர் விற்கப்படும் வாய்ப்புள்ளதா? எங்கிருந்து இறைச்சி வாங்கப்படுகிறது? அவற்றின் தரம் உறுதி செய்யப்படுகிறதா? ஷவர்மா தயாரிப்பவருக்கு உள்ளபடியே அதற்கான பயிற்சி இருக்கிறதா? இப்படி நிறைய கேள்விகள், பதிலுக்காகக் காத்திருக்கின்றன.

கெட்டுப்போன, நாட்பட்ட இறைச்சி பயன்படுத்தப்படும் பட்சத்தில், பெரும்பாலான நேரங்களில் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் இவற்றை உண்டாலும் தப்பிவிடுவார்கள். ஆனால், பிரச்சினையுள்ளவர்கள் பாடுதான் மோசமாகிவிடும்.

இந்த நிலையில் உணவுத்துறை அதிகாரிகளின் சோதனை ஒருபுறம் இருந்தாலும் உணவகங்களின் அக்கறையும் தனிக் கவனமும் உணவுத் தயாரிப்பில் அவசியமாகிறது. இறைச்சி உணவுகளுக்கான கட்டுப்பாடுகள் மட்டும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யாது என்பதை உணர்ந்து கொள்வதும், சைவம், அசைவம் என்கிற வேறுபாடுகளைத் தாண்டி உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளை குறிப்பிட்ட இடைவெளியில் முறையான சோதனைகளுக்கு உட்படுத்துவதும், இந்த விவகாரத்தில் தவறிழைப்பவர்களின் உணவக உரிமைகளை இரத்து செய்வதும், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதும் மட்டுமே கெட்டுப்போன உணவைப் பயன்படுத்தி உணவகங்களை நடத்துபவர்களுக்கு வழங்கும் சரியான தண்டனையாக இருக்கும்.

இவ்வளவு காலமாக கெட்டுப் போனவற்றை உண்பதால் பெரும்பாலும் வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற விடயங்களையே கேள்விப்பட்டிருக்கிறோம். மற்றபடி சில நாட்கள் மருத்துவமனையிலிருந்து விட்டுத் திரும்பிவிடுவார்கள். ஆனால், இப்போது கெட்டுப்போன ஷவர்மாக்கள் மரணத்தையே அழைத்துவருவது அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.

இந்த நிலையில் மக்களும், குறிப்பாக இளைய தலைமுறையினர், கண்டமேனிக்கு, கண்ட கடைகளில் சாப்பிடுவதைத் தவிர்த்து, முன்னெச்சரிக்கையுடன் தரத்தை உறுதி செய்துகொள்ளக் கூடிய கடைகளில் மட்டும் ஷவர்மா போன்ற உணவுகளைச் சாப்பிடுவது மட்டுமே தற்காத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

- ராம்குமார் -

# ஊரடங்கு வேளையில் யாழில் வெறிச்சோடி காணப்படும் வீதிகள்










**(யாழ். நிருபர்)**

நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலும் வீதிகள் வெறிச்சோடி காணப்படுவதுடன் கடைகள், பொதுச் சந்தைகள் மற்றும் அரச நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, விசேடமாக யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு அருகில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் அரசு ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் அலுவலகங்கள் தாக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஒரு இலட்சத்துக்கு அதிகமானோர் பணி நிமித்தம் வெளிநாடுகளுக்கு

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியினுள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக சென்றுள்ளதோடு, எதிர்வரும் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் செயலாளர் எம்.எப்.எம்.அர்ஷாத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 2021 ஆம் ஆண்டறிக்கையின் பிரகாரம், கடந்த வருடம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 121,795 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டை விட 127 சதவீதம் அதிகமாகும். அத்துடன், இவ்வருடம் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இமதுவ பிரதேச சபை தவிசாளர்**

## மாரடைப்பினால் உயிரிழப்பு

இமதுவ பிரதேச சபை தவிசாளர் டீ.வி.சரத்குமார மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.

குழுவொன்றினால் நேற்றிரவு அவரது வீடு தாக்கப்பட்டமையை அடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாநகர சபை உறுப்பினர் சுரங்க ராஜபக்ஷவிற்கு சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்று தீ வைக்கப்பட்டுள்ளது.

ஸ்பிரிங்வெளி - ரொக்கில் சந்தியில் அமைந்துள்ள குறித்த வர்த்தக நிலையம் பொதுமக்களால் இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் முதலைகள் நடமாட்டம்

### மக்கள் அச்சத்தில்

**(கல்லடி நிருபர்)**

மட்டக்களப்பு புளியந்தீவு லேக்வீதி - 02 இல் ஊரடங்கு சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியான நேற்று (10) மக்கள் நடமாட்டம் இல்லாத நிலையில் சுமார் 15 அடி நீளமான முதலையொன்று ஆற்றிலிருந்து வெளியே வந்து, கரையில் நின்ற நாயொன்றைப் பிடித்து ஆற்றினுள் இழுத்துச் சென்றுள்ளது.

இதன்போது மீண்டும் அம்முதலை கரையிலுள்ள தனது பாழியை நோக்கி வந்ததினால் மக்கள் பீதியடைந்து, பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தனர். அவர்கள் வருகைதந்து பார்த்தபோது அம்முதலை கரையில் மக்கள் நடமாட்டம் இருந்ததினால் கரைக்கு வராமல் நீரினுள் அமிழ்ந்திருந்தது.



இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைகளை விரட்டும் பட்டாசுகளை வெடிக்கச் செய்தனர். அப்போது மேற்படி முதலை ஆற்றை நோக்கிச் சென்றுவிட்டது. இதனையடுத்து மக்கள் கலைந்துசென்றனர்.












கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத்தையடுத்து ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் பிரதான நகரங்கள் முடங்கிப்போயுள்ளதுடன் பாதுகாப்புகளும் பலப்படுத்தப்பட்டிருந்தன.
(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க, லலித் பெரேரா)

# முன்னாள் பிரதமர் மஹிந்தவின் குடும்பத்தினர் பதுங்கியிருப்பதாக திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம்








(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு முன்னால் தற்போது பெருந்திரளான மக்கள் ஒன்று திரண்டு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக நெருக்கடி நிலை உக்கிரமடைந்ததை அடுத்து, நேற்று முன்தினம் (09) மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று (10) அதிகாலை மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு வெளியேறினார். இந்த நிலையில், அவர் திருகோணமலை வழியாக வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

இதனைக் கேள்வியுற்ற திருகோணமலை பகுதியைச் சேர்ந்த மக்கள் திருகோணமலை கடற்படைத் தளத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் பதுங்கியிருக்கலாம் எனத் தெரிவித்து கடற்படைத் தளத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்கவின் அம்பாறையிலுள்ள வீடு போராட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.
(படங்கள் - மாவடிப்பள்ளி நிருபர்)

## இலண்டன் வட்ஸ் அமைப்பின் புதிய நிர்வாக சபை தெரிவு!



(கல்லடி நிருபர்)

இலண்டன் வட்ஸ் அமைப்பானது ஐக்கிய இராச்சியத்திலுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கல்வி மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டோரை இனங்கண்டு, அவர்களுக்கு கடந்த 35 வருடங்களாக பல்வேறு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது. இந்நிலையில் இவ்அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) இலண்டன் வெம்பிளியில் இடம்பெற்றது. இதன்போது இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது.

## எரிபொருள் தட்டுப்பாட்டினால் தாமதமடைந்த சிறுபோக விதைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பம்



(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் விவசாய விரிவாக்கப் பிரிவிற்குட்பட்ட நூற்றுக்கணக்கான வயல் நிலங்களில் சிறுபோக நெல் விதைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீர்ப்பாசன வசதியிருந்தும் உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் இன்மை காரணமாக விவசாயிகள் சிறுபோக வேளாண்மை செய்கைக்காக தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

தற்போது ஓரளவிற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உழவு வேலைகளுக்காக எரிபொருள் வழங்கப்படுவதால் மீண்டும் உழுது பண்படுத்தி விதைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இருந்தும் சாதாரண போகங்களை விட இப்போகத்தில் இரண்டு மடங்கு செலவு அதிகரித்துள்ளதாகவும் அருகிலுள்ள வயல்கள் விதைத்து ஒரு மாதம் சென்றுள்ள நிலையில் நெற்பயிர் கதிர்பறியும் நிலையில் ஏனைய பகுதிகளில் அறுவடை இடம்பெறுகையில் நீர்ப் பிரச்சினைகள் மற்றும் யானைகளின் படையெடுப்பு போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கொழும்பு மத்தி ரோட்டரி கழகத்தினால் பாடசாலைகளுக்கு கணனிகள் அன்பளிப்பு





(கல்முனை நிருபர்)

கொழும்பு மத்தி ரோட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தினரால் கல்முனை கல்வி வலய பிரிவில் உள்ள இரு பாடசாலைகளுக்கு கணனிகள் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை விருத்திசெய்யும் முகமாக பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த கணனிகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது கமு/கமு/மல்ஹருஸ் ஸ்ம்ஸ் மகா வித்தியாலயத்துக்கு (தேசியபாடசாலை) 10 கணனிகள் அன்பளிப்பாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.ஐ.மதனியிடம் கொழும்பு மத்தி ரோட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தினரால் பாடசாலையில் வைத்து நேற்று (10) கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கல்முனை - அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்திற்கும் குறித்த கொழும்பு மத்தி றொட்டரி கழகத்தினரால் (Rotary club of Colombo Mid town) 10 கணனிகள் அன்பளிப்பாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக்கிடம் பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது.

கொழும்பு மத்தி றொட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தின் தலைவர் அர்சாட் ஜமால்ட்டீன், கொழும்பு மத்தி றொட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்களான இம்தியாஸ் இஸ்மாயில், ஜி.எஸ் சில்வெஸ்டர், நுஹ்மான் சிராஜுதின்,அஸ்வான் பங்சஜயா மற்றும் சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம்.ஏ.மலிக், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

மேலும் மாணவர்களின் நலன்கருதி குறித்த உதவியை செய்தமைக்கு பாடசாலை சமூகம் சார்பில் குறித்த கொழும்பு மத்தி றொட்டரி கழகத்திற்கு பாடசாலை அதிபர்கள் நன்றியினை இதன்போது தெரிவித்தனர்.

## திருகோணமலையில் இராஜாங்க அமைச்சர் கபில நுவன் அத்துகோரளவின் வீடு சேதம்




(கந்தளாய் நிருபர்)

திருகோணமலையில் இராஜாங்க அமைச்சர் கபில நுவன் அத்துகோரளவின் வீடு நேற்று முன்தினம் (09) தாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட இராஜாங்க அமைச்சர் கபில நுவன் அத்துகோரளவின் வீடு மற்றும் கந்தளாய் பிரதேச சபையின் ஐந்து உறுப்பினர்களின் வீடுகள் இவ்வாறு பொது மக்களினால் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் இராஜாங்க அமைச்சரின் வீடு பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு 30 முதல் 50 பேர் வரை வந்து கற்கள் மற்றும் பொல்லுகளால் வீடுகளை தாக்கி சொத்துக்களையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலிமுகத்திடல் மைதானத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்கு எதிராக கந்தளாயில் ஒரு நாள் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றதையடுத்து, ஆத்திரமூட்டும் நபர்களினால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# கிழக்கில் ஊரடங்கு காரணமாக பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்



காத்தான்குடி








மட்டக்களப்பு





கின்னியா





## போடியார் புலம்பல்!



அந்த மனிசன் மகிந்த ஏற்கனவே பதவிய உட்டு விலகி இருந்தால் இந்த நாசமறுப்பு கொழும்பு தொடக்கம் தென்னிலங்கையில ஏற்பட்டிருக்காது எலுவா இருந்தாலும் அவரும் அவரிட தம்பியும் 2009, மே மாதம் முள்ளிவாய்காலில படுத்தின பாடு இன்று 2022, மே மாதம் அவரயும் அவரிட குடும்பத்தையும் பாடா படுத்துது வினை விதைத்தவன் வினை அறுப்பான், தின விதைத்தவன் தின அறுப்பான் எண்டது மெய்யா மெய்யா இப்ப தெரிஞ்சிபோச்சுது.. எலுவா,,?

# பெரியநீலாவணை கடற்கரையில் 10 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் இனந்தெரியாதோரால் தீ வைப்பு







(வெல்லாவெளி நிருபர்)

பெரியநீலாவணை கடற்கரையில் பத்து இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நாசகார கயவர்களால் தீவைத்து எரிக்கப்பட்டன.

பெரியநீலாவணை கடற்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்ட கரைவலைத்தோணி ஒன்று இனந்தெரியாத நாசகார கயவர்களால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக கரைவலை உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை 1பீ சேர்ந்த சிவலிங்கம் - தனுஜன் என்பவருக்கு உரித்தான கரைவலைத்தோணியே இனந்தெரியாத சந்தேக நபர்களால் தீவைத்து எரித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (09) இரவு 11.00 மணியளவில் நடைபெற்றுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நிறுத்தி வைக்கப்பட்ட கரைவலைத்தோணியானது தீப்பற்றிக்கொண்டதை கண்டவர்கள் அதன் உரிமையாளரின் வீட்டுக்கு சென்று தெரிவித்துள்ளனர். இவ்விடயமாக தோணி உரிமையாளர் தனது உறவினர்களின் உதவியுடன் கடற்கரைக்கு விரைந்து சென்று பார்வையிட்டதுடன், தீப்பற்றிக்கொண்ட கரைவலைத்தோணியை நீர் ஊற்றி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் நேற்று (10) அதிகாலை 01.00 மணியளவில் இவ்விடயமாக முறைப்பாடுகளை பதிவுசெய்துள்ளார்கள். இதனால் தோணி உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன், கரைவலை மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் சுமார் 100 மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்ட கரைவலைத் தோணியின் பெறுமதி சுமார் பத்து இலட்சம் ரூபா இருக்கும் என உரிமையாளர் தெரிவித்தார்.

இவ்விடயமாக செய்தி எழுதும்வரையும் பொலிஸாரோ அல்லது பிரதேசத்திற்கு பொறுப்பான கிராமசேவையாளரோ சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சமுகமளிக்கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

# அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை குண்டர்கள் கொண்டு தாக்கியதை வன்மையாக கண்டிக்கின்றோம்

## இலங்கை அரச ஆசிரியர்களின் சங்க கிழக்கு மாகாண செயலாளர்

(மண்முனை நிருபர்)



முறையற்ற அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் அமைதியான முறையில் இடம்பெற்று வந்த போராட்டத்தினை முன்னெடுத்த போராட்டக்காரர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தினை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம் என இலங்கை அரச ஆசிரியர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் கோபாலசிங்கம் சுஜிகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (10) ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடுகையில்,

30 நாட்களாக இடம்பெற்றுவந்த போராட்டத்தினை குழப்பும் வகையில் குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவான குண்டர்களால் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை குறித்து இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் ஒழுங்கற்ற ஆட்சியால் அதிருப்தியடைந்த பொதுமக்கள் அரசுக்கு எதிராக மிகவும் அமைதியான முறையிலேயே இந்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். எனினும், இவர்களின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத நிலையில் மேற்படி கீழ்த்தரமான தாக்குதல் காரணமாக மக்கள் இன்று ஆத்திரமடைந்து நாடு முழுவதும் அமைதியற்ற சூழல் உருவாகியுள்ளது. பொதுமக்கள் ஒருவரை ஒருவர் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நேற்றைய இச் சம்பவம் இலங்கை வரலாற்றில் ஒரு ஆறாத வடுவாகவே காணப்படும் என்பது திண்மம்.

ஆட்சியிலுள்ளவர்கள் மக்களின் வலி மற்றும் வேதனைகளைப் புரிந்து உடன் விரைந்து செயற்பட்டு நாட்டில் அமைதி நிலையினை ஏற்படுத்த வேண்டும். உடன் அரசியல் நிலைமைகளை சீர்செய்ய வேண்டும். இக்கட்டான இந்நிலையில் மக்களின் நிலையினை புரிந்து செயற்பட வேண்டும். நல்லதொரு அரசியல் நிலைமையினை கட்டியெழுப்ப வேண்டும் என இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கம் இடித்துரைக்கின்றது. நிலைமை சீராகும் வரையில் மக்களின் பக்கமாக நின்றே எமது ஆசிரியர் சங்கம் போராடும் எனவும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், பொதுமக்கள் இந்த இக்கட்டான நிலையில் நிதானம் இழக்காது வன்முறையில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். நீங்கள் செய்கின்ற செயலில் முற்றாக பாதிக்கப்படப் போவது எமது சமூகமே. பொறுமையை கடைப்பிடித்து அமைதியான முறையில் உங்கள் போராட்டத்தினை மேற்கொள்வது இந்நிலையில் யாவருக்கும் நன்மை பயக்கும். மேலும் மாணவர்கள் கடந்த மூன்று வருடங்களாக கல்வி நிலையில் பாரிய வீழ்ச்சியை கண்டுவருகின்றார்கள். இவ் இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் மனம்தளரலாகாது. நாட்டின் தற்போதைய நிலை உங்களின் கல்வி நோக்கிய சிந்தனையில் எத்தகைய குழப்பத்தையும் ஏற்படுத்திவிடக்கூடாது. எனவே உங்கள் கற்றலை இடைவிடாது தொடர்ந்திட வேண்டும் என ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்கின்றது. மேலும் தங்களது கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளில் அனைத்து ஆசிரியர்களும் ஏதோவொரு வகையில் தங்களுக்கு உதவிக்கொண்டிருப்பார்கள் எனவும் நம்பிக்கையளிக்கின்றோம். எதிர்காலம் மீண்டும் செழிப்படையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கு காரணமாக கிழக்கில் அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்




(பாலமுனை நிருபர்)

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக நேற்று (10) அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை, ஒலுவில் போன்ற பல பிரதேசங்களில் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை (09) சில பிரதேசங்களின் வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டதுடன், அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. இதனால் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் வீதி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் குறித்த பிரதேசங்களிலுள்ள அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், கடைகள் போன்றன மூடப்பட்டும், வைத்தியசாலைகள், அரச நிறுவனங்கள் ஸ்தம்பிதமடைந்தும் காணப்பட்டதுடன், போக்குவரத்தும் இடம்பெறாமையால் பொது மக்களின் இயல்பு நிலை முற்றாக பாதிப்படைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மக்களின் அறவழிப் போராட்டங்களை குண்டர் படைகொண்டு அடக்க முற்படுவது காட்டுமிராண்டித்தனமான ஈனச்செயலாகும்

## கல்முனை முதல்வர் றகீப் பலத்த கண்டனம்

(சாய்ந்தமருது நிருபர்)

விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதியை பதவி விலகக்கோரியும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற பொதுமக்கள் மீது அரசாங்கம் தமது குண்டர்களை ஏவிவிட்டு தாக்குதல் மேற்கொண்ட சம்பவமானது மிகவும் காட்டுமிராண்டித்தனமான ஈனச் செயலாகும் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்கள், ஊழல், மோசடிகள் காரணமாக தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாரிய பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். வாழ்க்கைச் சுமையை தாங்கிக்கொள்ள முடியாமல் திண்டாடும் மக்கள், தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி, அறவழிப் போராட்டங்கள் நடத்துவதை குண்டர் படை கொண்டு அடக்க முற்படுவதானது கோழைத்தனமான ஈனச்செயலாகும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் ஜனநாயகம், மனித உரிமைகள், மத சுதந்திரம், சிறுபான்மையினரின் சமய, கலாசார உரிமைகள் போன்றவற்றை மறுதலித்து அடக்குமுறைகளை கையாண்டதன் விளைவாகவே சர்வதேசம் இலங்கைக்கு உதவ முன்வராமல் கைவிரித்திருந்தது.

இந்நிலையில், ஒட்டுமொத்த மக்களினதும் நியாயமான போராட்டங்களை அடக்கியொடுக்க முற்படுவதானது தற்போது சில நாடுகளிடமிருந்து கிடைத்து வருகின்ற மனிதாபிமான உதவிகளைக் கூட தடுத்து விடலாம். இதனால் அந்நாடுகள் எமது நாட்டை ஏறெடுத்தும் பார்க்காமல் கைவிடக்கூடிய அபாயம் ஏற்படலாம்.



அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் மனிதன் மனிதனைப் பிடித்து விழுங்கும் அளவுக்கு எமது நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படலாம். இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாதவாறு இறைவன் பாதுகாக்க வேண்டும். அதற்காக எல்லோரும் பிரார்த்திப்போம்.

மக்களின் அவலக்குரல்களுக்கு செவிசாய்த்து, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அவசரமாக தீர்வினைத் தேட வேண்டியதே அரசின் மீதுள்ள கடமையாகும். அதற்காக எமது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்மொழிந்திருக்கின்ற ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் பொறிமுறை மாற்றங்கள் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதனைச் செய்வதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினரை சந்தித்த ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் இன்று இப்பொறுப்புடைமையை புறந்தள்ளி விட்டு, அதற்குப் பதிலாக வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவ்வாறு அரச அராஜகத்தை கட்டவிழ்த்து விடுவதற்காகத்தான் ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறாரா என்று கேட்க விரும்புகிறோம்.

மக்களின் நியாயமான போராட்டங்களை அடக்கியொடுக்க முற்படுவதானது நிலைமையை இன்னும் மோசமடையச் செய்து பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் சக்திக்கு முன்னால் அரச அராஜகம் நீண்ட நாட்களுக்கு தாக்குபிடிக்காது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் முதற்படியே மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்திருக்கிறார். எனினும் அவர் கௌரவமாக பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் அந்த சந்தர்ப்பத்தை தவற விட்டு, குண்டர் படையை ஏவி, கலவரங்களை ஏற்படுத்தி விட்டு, இரத்தக்கறை படிந்த கரங்களுடன், அவமானப்பட்டு- அவப்பெயருடன் விடை பெற்றிருக்கிறார்.

இந்நிலையில், ஸ்திரமானதும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான ஆட்சியொன்று அமைவதன் ஊடாகவே பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும் என்கிற தாரக மந்திரத்தை ஏற்றுக்கொண்டு, இனியும் தாமதியாமல் ஜனாதிபதி அதற்கு வழி விட வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் மக்கள் சார்பில் வலியுறுத்துகின்றோம் - என்று கல்முனை முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் தெரிவித்துள்ளார்.

# காலிமுகத்திடல் தாக்குதலை கண்டித்து மட்டக்களப்பில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(கனகராசா சரவணன்)

காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' மீது இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து மட்டக்களப்பு ஊறணி சந்தியில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் (09) இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஊறணி சந்தியில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு ஒன்றிணைந்து காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து பல்வேறு வசனங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு, கோஷங்கள் எழுப்பி அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக ஆரம்பித்து பிள்ளையாரடி வரையும் ஊர்வலமாக சென்று அங்கு சுமார் அரை மணிநேரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து அந்த பகுதியில் இருக்கும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டிற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்நுழைவார்கள் என்ற அச்சத்தையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு அந்த பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



# முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

(காத்தான்குடி, மட்டக்களப்பு நிருபர்கள்)

காத்தான்குடியில் முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு (09) திங்கட்கிழமை மாலை கல்வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


காத்தான்குடி 3ஆம் குறிச்சி ஊர்வீதியிலுள்ள முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது நேற்று முன்தினம் மாலை மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தபோது இந்த கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலினால் வீட்டின் முற்பகுதியிலுள்ள ஜன்னல் கண்ணாடியொன்று உடைந்து சேதமடைந்துள்ளது. இதனையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



# மருதமுனை அல் - ஹிக்மா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா








(பெரியநீலாவணை நிருபர்)

மருதமுனை அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலை ஏற்பாடுசெய்த வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் அதிபர் எம்.எல்.முஹம்மட் மஹ்ரூப் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது.

ஆண்டுதோறும் பாடசாலை வளாகத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் இந்த வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 3 ஆண்டுகளாக அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை. எனினும் இம்முறை பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றினார்.

2019, 2020, 2021ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டு புள்ளிகளுக்கு மேல் சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்த மாணவச் செல்வங்களுக்கு பதக்கம், பரிசு மற்றும் நினைவுச்சின்னங்கள், வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான புள்ளிகளைப்பெற்ற முதல் நிலை மாணவர்களுக்கு சிறப்பு நினைவுப் பரிசுகள் மற்றும் கிரீடம் அணிவிக்கப்பட்டு அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களை ஆற்றுப்படுத்தி சாதனைக்கு உரமூட்டிய ஆசிரியர்களும் இதன்போது அதிதிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எம்.எச்.எம். ஜாபீர், கணக்காளர் வை.கபீபுல்லா ஆகியோரும் விசேட அதிதிகளாக மருதமுனை ஸம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான், பிரதி அதிபர் எம்.பி.ஏ. ராஜி, முன்னாள் அதிபர் ஏ.எல்.சக்காப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் விழாவை அழகுபடுத்தி மாணவர்களின் கல்வி முயற்சி குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.